முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் நரசிங்கமுனைய நாயனார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

26.12.2018, புதன்கிழமை

1. **குருபரனே குருராசனாக வந்து**
**குவலயம் காக்க அரங்கன் உருவில்**
**தருமசேவை வளர்த்து மக்களை**
**தயவுமிக்க சக்தியாக மாற்றி வர**
2. வருகவே அரங்க ஞானி மூலம்
வையகமே பாதுகாப்பு பெறும் எனக் கூறி
உறுதி கூறி ஒளி சூட்சும நூலை
உரைத்திடுவேன் **விளம்பி சிலை திங்கள்**
3. **திங்களிலே லாபதிகதி புந்தி வாரம்**
**(விளம்பி வருடம் மார்கழி மாதம் 11ம் நாள் 26.12.2018, புதன்கிழமை)**
**தேசிகனுக்கு நரசிங்க முனைய நாயனாரும்**
ஓங்கார உலகம் அமைய உரைப்பேன்
ஓதிடுவேன் முருகப்பெருமான் வழிபாடு
4. வழிபாடும் கலியுகம் தன்னில்
வல்லமைபட சக்தியாக பெருகிட
அழிவென்பது எந்த வகையுமில்லா
அகிலமே பாதுகாப்பை பெறும்
5. காப்பு தரும் வேலவன் சக்தி
கருணையாக பரவி வருக
ஒப்பு கொண்டு அரங்கனை ஏற்று
உலகோர் முழு சரணடைவு கண்டு வர
6. வருகவே மக்களிடை சமத்துவ
வல்லமையான மனபக்குவமும்
முருகப்பெருமானின் ஆசியால்
முழுமைபட மாற்றமும் வளர்ச்சியும் காணும்
7. காணவே பேதமான நிலை
கட்டுப்பாடற்ற பேராசை நிலை
ஞானமிலா வஞ்சம் சூழ்ச்சி நிலை
நாணயமில்லா செயல் நிலைபாடுகள் எல்லாம்
8. எல்லாமே மக்களை விட்டகன்று
எல்லாம் சமம் என்ற நிலையும்
இல்லாமை என்ற சூழல் மாறி
யாவருக்கும் உணவு உடை உறைவிடமென
9. என அனைத்தும் பொது சமமாகி
எல்லையிலா முருகன் சக்தி மூலம்
ஞானவான்கள் உருவாக்கப்பட்டு
ஞானிகள் ஆக்கும் தேர்வு நடந்துவர
10. வருகவே அரங்கமகானை நம்பி
வருகின்ற மக்கள் எல்லோரும்
ஆறுமுக அரங்கன் சீடர்களாகி
அகிலமெங்கும் சேவை பரப்பி

11. பரப்பியே சரவண சோதி ஏற்றி
பரவிட முருகப்பெருமான் வழிபாடு
தரணியை காக்கும் மீட்கும்
தாமுரைத்த ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் நரசிங்கமுனைய நாயனார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

குருவிற்கெல்லாம் குருவாக விளங்கும் குருபரனே குருராசனாக வந்து இவ்வுலகைக் காத்திட ஆறுமுக அரங்கமகா தேசிகனார் உருவினில் தருமத்தின் சேவைகளை அளவிலாது வளர்த்து மக்களை தயவுமிக்க தயவுசக்தியாக தர்மத்தின் சக்தியாக மாற்றி வருகின்றார் உத்தம மகா ஞானி ஆறுமுக அரங்கமகாதேசிகனார் மூலம் இவ்வுலகமே பாதுகாப்பை பெற்றிடும் எனக் கூறியே உலக நலம் கருதி கலியுகம் மாறி உலகினில் ஓங்கார உலகம் அமைந்திடவே **விளம்பி வருடம் மார்கழி மாதம் 11ம் நாள் 26.12.2018, புதன்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே நரசிங்கமுனைய நாயனார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் நரசிங்கமுனைய நாயனார்.

சர்வ வல்லமைமிக்க முருகப்பெருமானின் வழிபாடுகள் கலியுகத்தினில் அதிகமாக செய்திட செய்திட வல்லமைபட பெரும் சக்தியாக மாறி உலகினில் எந்த வகையிலும் அழிவு என்பது இல்லாத சூழ்நிலையை உருவாக்கி இவ்வுலகமே முருகப்பெருமானின் அருள் பாதுகாப்பை பெற்றிடுமப்பா.

உலகினில் பாதுகாப்பை தருகின்ற முருகப்பெருமானின் அருள் சக்தி கருணையுடன் பரவி வருகின்றது. முருகப்பெருமானின் அவதாரமாக வந்துதித்திட்ட அவதார ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரை உலக மக்களெல்லாம் குருவாக ஏற்றுக் கொண்டு அரங்கமகா சற்குருவின் திருவடிகளிலே பயபக்தியுடன் பணிந்து உள்ளம், உடல், பொருள், ஆவி என அனைத்தையும் மானசீகமாக அர்ப்பணித்து முழுச்சரணாகதியினை அடைந்திட உலக மக்களிடையே சமத்துவம் பெருகி பேதாபேதங்கள் எல்லாம் நீங்கி வல்லமைகள் பெருகி மக்களின் மனது பக்குவநிலைக்கு வந்திடும். உலகமே முருகப்பெருமானின் அருளாசியினால் நல்ல மாற்றமும் முன்னேற்றங்களையும் சகலதுறைகளிலும் வளர்ச்சியடையும்.

பேதாபேதங்கள், கட்டுப்பாடற்ற பேராசைகள், பேராசை கொண்ட பிடிவாத நிலை, ஞானமற்ற வகையில் நாணயமில்லாது நடத்தல் போன்ற தர்மமற்ற தீயசெயல் நிலைப்பாடுகள் எல்லாம் மக்களை விட்டு அகன்று அனைவரும் சமம் எனும் சகோதர நிலை உருவாகி உலகினில் இல்லாமை எனும் வறுமை சூழ்நிலை நீங்கி யாவருக்கும் உணவு, உடை, இருக்க இருப்பிட வசதி என அனைத்தும் அனைத்து மக்களுக்கும் கிடைத்து உணவு, உடை, உறைவிடம் என்பது அனைவருக்கும் சமமானது, பொதுவானது எனும் நிலையும் உருவாகி அனைத்தும் சமம் என்றே ஆகி எல்லையில்லா முருகப்பெருமானின் சக்தியின் மூலமாக உலகினில் பண்புமிக்க ஞானம்மிக்க ஞானவான்கள் உருவாக்கப்பட்டு ஞானிகளாக அவர்களை ஆக்கிடவே அரங்கமகான் மூலம் தேர்வு நடந்து வருகுதப்பா.

ஆதலினாலே மக்களே உத்தம மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரை முழுமனதாக நம்பிக்கையுடன் ஏற்றுக் கொண்டு ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் திருவடி பணிந்து அர்ப்பணித்து அரங்கன் கூறும் தூய ஞானநெறிகளை ஏற்றுக் கொண்டு தவறாது நெறிப்படி வாழ்ந்து ஆறுமுக அரங்கனின் சீடர்களாக ஆகியே உலகமெங்கும் அரங்கனின் பெருமைகளை எடுத்துச் செல்வதுடன் உலகமெங்கும் அரங்கனின் தானதருமப் பணிகளை பரவிடச் செய்து உலகமெங்கும் அருட்சுடரான சரவணஜோதி ஏற்றி வழிபாடுகளை செய்திட செய்து, உலகமெங்கும் சரவணஜோதிச்சுடரின் அருளொளியை பரவிட செய்தும், முருகப்பெருமானின் வழிபாடுகளை உலக மக்களெல்லாம் செய்திடச் செய்தும் வந்திட, உலகினில் முருகப்பெருமானின் அருள் பெருகி அது உலகையே காத்து ரட்சிக்கும் உலகை கலியுகத்துன்பங்களிலிருந்து மீட்கும் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் நரசிங்க முனைய நாயனார்.

–சுபம்–